**முட்டை விலை**

First Published : 20 Mar 2011 12:49:46 PM IST

நாமக்கல், மார்ச் 19: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.10, சென்னையில் ரூ.2.23.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.69, முட்டைக் கோழி கிலோ ரூ.25.

**அணை நீர்மட்டம்**

First Published : 20 Mar 2011 12:50:23 PM IST

மேட்டூர்

சனிக்கிழமை

நீர்மட்டம் : 107.91 கன அடி

அணைக்கு நீர்வரத்து : 1,366 கன அடி

வெளியேற்றப்படும் நீர் : 1,800 கன அடி

நீர் இருப்பு : 75.47 டி.எம்.சி.

**மஞ்சள், பருத்தி ஏலம் ஒத்திவைப்பு திடீர் அறிவிப்பால் விவசாயிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,02:07 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடக்க இருந்த மஞ்சள் ஏலம், திடீரென ஒத்திவைக்கப்பட்டது. ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.

அதில், ஆத்தூர், தம்மம்பட்டி, கெங்கவல்லி, பெரம்பலூர், திருவண்ணாமலை, சின்னசேலம் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்களுடைய மஞ்சளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.ஆத்தூர் பகுதியில் தரமான மஞ்சள் கிடைப்பதால், மஞ்சள் ஏலத்தில் கலந்து கொள்ளும் வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகள், கூடுதல் விலை கொடுத்து மஞ்சளை வாங்கிச் செல்கின்றனர்.நேற்று முன்தினம், 19ம் தேதி சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடப்பதாக இருந்தது. பங்குனி உத்திரத்தையொட்டி, வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்ட மஞ்சள் வியாபாரிகள், ஏலத்தில் கலந்து கொள்ளாத நிலை ஏற்பட்டது.

அதன் காரணமாக, கடந்த சனிக்கிழமை நடக்க இருந்த மஞ்சள் ஏலம் திடீரென ஒத்திவைப்பதாக, கூட்டுறவு சங்க அலுவலர்கள் அறிவித்தனர்.ஆனால், மஞ்சள் ஏலம் நடப்பதாக வெளி மாவட்டம் மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள், மஞ்சள் மூட்டைகளை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். ஏலம் ஒத்திவைக்கப்பட்டதால், விவசாயிகள் ஏமாற்றத்துடன் மஞ்சள் மூட்டைகளை திருப்பி எடுத்துச் சென்றனர். புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடக்கவிருந்த பருத்தி ஏலமும் ஒத்திவைக்கப்பட்டதாக, கூட்டுறவு சங்க அலுவலர்கள் தெரிவித்தனர்.

**விதை மஞ்சள் விற்பனைக்கு தயார்**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,02:09 IST

பனமரத்துப்பட்டி: ""செதில் பூச்சி மற்றும் கிழங்கு அழுகல் நோயை தாங்கி வளரும் பி.எஸ்.ஆர்.,-2 ரக விதை மஞ்சள் விற்பனைக்கு உள்ளது'' என சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் தெரிவித்தார்.இது குறித்து அவர் கூறியதாவது:கடந்த ஆண்டு கிழங்கு அழுகல், செதில் பூச்சி தாக்குதல் அதிகம் ஏற்பட்டதால் மஞ்சள் உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டது. சரியான விதை கிழங்கு தேர்வு, விதை கிழங்கு நேர்த்தி, பூச்சி கட்டுப்பாடு முறை ஆகியவை முக்கிய காரணம்.இக்குறைகளை நிவர்த்தி செய்ய செதில் பூச்சி, கிழங்கு அழுகல் நோயை தாங்கி வளரும் தன்மை கொண்ட பி.எஸ்.ஆர்.,-2 ரக விதை மஞ்சள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ரக மஞ்சள், 8 மாதத்தில் ஒரு ஹெக்டேருக்கு, 32 டன் வரை மகசூல் கிடைக்கும்.சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள பி.எஸ்.ஆர்.,-2 விதை மஞ்சளை பெற்று, அதன் சாகுபடி முறைகளை அறிந்து விவசாயிகள் பயன்பெறலாம், என்றார்.

**அரிய மூலிகை பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,01:15 IST

ராசிபுரம்: யார்ட்ஸ் தொண்டு நிறுவனம், சென்னை சி.டி.ஆர்., பவுன்டேசன் சார்பில், அரிய வகை மூலிகைகளின் பாதுகாப்பு மற்றும் அதன் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு, ராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலை கல்லூரியில் நடந்தது.கல்லூரி முதல்வர் (பொறுப்பு) ராணி தலைமை வகித்தார். யார்ட்ஸ் தொண்டு நிறுவன செயலாளர் சரவணகுமார் வரவேற்றார். அரசு ஆரம்ப சுகாதார மைய சித்த மருத்துவ ஆலோசகர் பூபதி ராஜா முன்னிலை வகித்தார்.ராசிபுரம் பகுதியில் உள்ள மூலிகை தாவரத்தின் வகை, அவற்றின் மருத்துவ குணம், அவை அழிவதற்கான காரணம், அபூர்வ உள் நாட்டு மூலிகை தாவரம் பாதுகாப்பதன் அவசியம், அழிந்து விட்ட மூலிகை மரங்கள், பற்றாக்குறை உள்ள மூலிகை தாவரம் குறித்தும் விளக்கப்பட்டது.தொடர்ந்து, மூலிகை செடிகளின் வகைகள், அதன் மருத்துவ குணங்கள் குறித்து சைக்கிள் பேரணி மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பழைய பஸ் ஸ்டாண்டில் துவங்கிய பேரணி, புதுப்பாளையம் சாலை, ஆசிரியர் காலனி, வீட்டு வசதி வாரிய சாலை, பட்டணம் சாலை, வி.நகர், சின்ன மற்றும் பெரியக்கடை வீதி, நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று அரசு மருத்துவமனையை அடைந்தது.கருத்தரங்கை முன்னிட்டு கல்லூரி வளாகத்தில் இழுப்பை, பூவரசு, புங்கை உள்ளிட்ட மரக்கன்றுகள் நடப்பட்டது. மூலிகை குறித்து பல்வேறு ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.கல்லூரி தேசிய மாணவர் படை சிவக்குமார், டாக்டர் கணேசன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**சர்க்கரை ஆலை முன் விவசாயிகள் போராட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,02:07 IST

குமாரபாளையம்: பள்ளிபாளையத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்பை கொண்டு செல்லாமல், விவசாயிகள் போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. பள்ளிபாளையத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் ஒப்பந்த அடிப்படையில் பள்ளிபாளையம் அதன் சுற்றுவட்டாரத்தில் நடவு செய்யப்பட்ட கரும்புகளை அரவைக்கு வெட்டி எடுத்து வருகின்றனர். ஒட்டப்பள்ளி எனும் கிராமத்தில் பொன்னி சர்க்கரை விவசாயிகள் சங்கத்தினர் உள்ளனர். அந்த சங்கத்தை சேர்ந்த விவசாயிகள் சிலர் நேற்று, வாகனங்கள் மூலம் ஆலைக்கு கரும்புகளை

கொண்டு சென்றனர். அங்கு, கரும்பை ஆலைக்குள் கொண்டு செல்லாமல் வெளியே நிறுத்தி திடீர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கரும்பு அறுவடையின் போது, சோகையை தீயிட்டு எரிக்கக் கூடாது. 11 மாதத்தில் கரும்பை அறுவடை செய்ய வேண்டும். ஒப்பந்தம் செய்த விவசாயிகளிடம் மட்டும் கரும்பு வெட்ட வேண்டும் என, கோரிக்கை விடுத்துள்ளனர். அதுசம்மந்தமாக, ஆலை நிர்வாகத்தினர் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். முடிவு எதுவும் எட்டப்படாததால், கரும்பு அரவைக்கு கொண்டு செல்லாமல் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**கால்வாய் உடைந்து தண்ணீர் விரயம்: விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,00:08 IST

ஓசூர்: ஓசூர் கெலவரப்பள்ளி அணையின் இடது புற பாசன கால்வாய் நேற்று திடீரென்று உடைந்தால், விவசாய தோட்டம், கிணறு நீரில் மூழ்கின. இதனால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.ஓசூர் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி அணை கட்டப்பட்டுள்ளது. அணையின் வலது மற்றும் இடது புற கால்வாய் மூலம் 6,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.கெலவரப்பள்ளி அணை மற்றும் கால்வாய்கள் கடந்த ஆண்டு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 89 லட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.அதன் பின் கடந்த ஆண்டு பிப்ரவரி 14ம் தேதி முதல் கெலவரப்பள்ளி அணையில் இருந்து தொடர்ச்சியாக பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இடது புற கால்வாய் மூலம் கொத்தூர், ஆளூர், தின்னூர், நல்லகான கொத்தப்பள்ளி, கதிரேப்பள்ளி, சப்படி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த 4,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்றது.நேற்று காலை கொத்தூர் அருகே இடதுபுற கால்வாயில் வழக்கம் போல் தண்ணீர் சென்ற போது, திடீரென கால்வாய் 20 மீ., நீளத்துக்கு உடைப்பு ஏற்பட்டது. இதனால், கால்வாயில்

இருந்து தண்ணீர் பீறிட்டு வெளியேறி அருகில் உள்ள வெங்கடசாமி என்பவரின் விவசாய தோட்டத்தில் புகுந்தது.இதில், அவருடைய விவசாய கிணறு கால்வாய் தண்ணீர், மண் மற்றும் கற்கள் நிரம்பி மூடி நாசமடைந்தது. விவசாய பயிர்கள் நீரில் மூழ்கியது. அதிர்ச்சியடைந்த அப்பகுதி விவசாயிகள் உடனடியாக பொதுப்பணித்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.அவர்கள் உடனடியாக அணையின் இடதுபுற கால்வாயில் தண்ணீர் திறந்து விடுவதை நிறுத்தினர். உடைப்பு ஏற்பட்ட இடத்துக்கு வந்து பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிக்கு ஆறுதல் கூறினர்.இடது புறகால்வாயில் தற்போது ஏற்பட்ட உடைப்பால், 2,000

ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவது தடைப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுக்கு முன் இதே கால்வாயில் தற்போது உடைப்பு ஏற்பட்ட இடத்தில் இருந்து 400 மீட்டர் தொலைவில் உடைப்பு ஏற்பட்டு ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:நீர் வளநிலவள திட்டத்தின் கீழ் அணையின் கால்வாய்களை முழுமயாக சீரமைக்கவில்லை. ஆங்காங்கே சேதமடைந்த பிட்டுபிட்டு பகுதிகளை மட்டும் பராமரித்தோம். தற்போது உடைப்பு ஏற்பட்ட இடம் பழைய கால்வாய் கட்டிடம் என்பதால் சேதமடைந்துள்ளது. உடைப்பு காரணமாக அணையில் தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டுள்ளதால், பயிர்களுக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை.நெல் பயிர்கள் அறுவடை முடிந்து விட்டது. தற்போது காய்கறிகள் பயிர்கள் மட்டும் உள்ளன. ஒரு வாரம் வரை தண்ணீர் இல்லாமல் காய்கறி செடிகள் தாக்குபிடிக்கும் என்பதால், அதற்குள் கால்வாயை சீரமைத்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**திருப்பரங்குன்றத்தில் ஆவின் பால் தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,01:47 IST

திருப்பரங்குன்றம்:திருப்பரங்குன்றம், திருநகர் பகுதிகளில் ஆவின் பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.திருப்பரங்குன்றம், திருநகர், ஹார்விபட்டி, பாண்டியன்நகர், பாலாஜி நகர் பகுதிகளில் 20க்கும் மேற்பட்ட ஆவின் பால் பூத்துக்கள் உள்ளன. தினம் 15 ஆயிரம் லிட்டருக்குமேல் இப்பகுதிகளில் ஆவின் பால் விற்பனையாகிறது. சில மாதங்களாகவே, அட்டைதாரர்களுக்கு தவிர, பணம் கொடுத்து வாங்குபவர்களுக்கு, சப்ளை செய்யப்பட்டதில் இருந்து பாதி அளவு ஆவின் நிறுவனம் பாலை சப்ளை செய்ததால், அப்பகுதியில் ஆவின் பால் தட்டுப்பாடு ஏற்பட்டது. சில நாட்களாக அட்டை தாரர்கள் தவிர, பூத்துக்கு 20முதல் 50 அரைலிட்டர் பாக்கெட்டுகள் மட்டுமே சப்ளை செய்யப்படுகிறது.

(ஒவ்வொரு பூத்துக்கும் குறைந்தது 500 அரைலிட்டர் பால் பாக்கெட்டுகள் தேவை) இதனால் மக்கள் அதிக விலை கொடுத்து தனியார் பால் பாக்கெட்டுகளை வாங்கிச் செல்கின்றனர். மதுரை ஆவினில் இருந்து தினம் சென்னைக்கு பால் சப்ளை செய்யப்படு
வதால், இதுபோன்ற பற்றாக்குறை இருப்பதாக பூத் ஏஜெண்டுகள் கூறகின்றனர். ஆவின் பால் பற்றாக்குறையால், தனியார் பால் விற்பனை மூலம், பூத் ஏஜெண்டு
களுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. ஆவின் பாலை மட்டுமே விற்பனை செய்யும் பூத் ஏஜெண்டுகளின் நிலை பரிதாபம். அப்பகுதி பெண்கள் சிலர் கூறுகையில், " தனியார் பாலை அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. ஆவின் பாலை குடித்து பழகிய குழந்தைகள் மற்ற

பாலை குடிக்க மறுக்கின்றன. பால் தட்டுப்பாட்டை போக்க ஆவின் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஆந்திர மிளகாய் விலை உயர்கிறது**

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2011,01:09 IST

கோபிசெட்டிபாளையம்: வரத்து குறைவால் ஆந்திரா உயர்ரக மிளகாய் விலை படிப்படியாக உயர்ந்து வருகிறது. கோபி மொடச்சூர் சந்தையில் வரத்து அதிகரிப்பால் உள்ளூர் குண்டு மிளகாய் விலை குறைந்து வருகிறது. தமிழகம் மற்றும் ஆந்திராவில் செப்டம்பர் முதல் நவம்பர் மாதம் வரை வடகிழக்கு பருவமழை வெளுத்து வாங்கியது. காய்கறிகள் உற்பத்தி குறைந்ததால் விலை தாறுமாறாக உயர்ந்தது. வெங்காயம் விலையை கட்டுப்படுத்த, மத்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்திருந்தது. தற்போது, வரத்து அதிகரித்துள்ளதால் கத்தரி, தக்காளி, வெங்காயம் உள்ளிட்ட காய்கறி விலை குறைந்துள்ளது.தமிழகத்தில் விருதுநகர், மூலனூர் மற்றும் கொளத்தூர் பகுதிகளில் அதிகளவில் மிளகாய் பயிரிடப்படுகிறது.ஆந்திராவில் அதிகம் விளையும் "என்டோ பை' என்ற உயர்ரக மிளகாய் மழை காரணமாக உற்பத்தி குறைந்துள்ளது. சென்ற மாதம் கிலோ 100 ரூபாய்க்கு விற்ற வர மிளகாய் 120 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது.தமிழகத்தில் அதிகம் விளையும் குண்டு மிளகாய் உற்பத்தி அதிகரித்துள்ளதால், விலை குறைந்து வருகிறது. கடந்த மாதம் 150 ரூபாய்க்கு விற்றது; தற்போது 100 ரூபாயாக விலை குறைந்துள்ளது.கோபி மொடச்சூர் சந்தைக்கு நேற்று அதிகளவில் குண்டு மிளகாய் மற்றும் மூலனூர் மிளகாய் விற்பனைக்கு வந்தது. அதிகப்பட்சமாக கிலோ 100 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 70 ரூபாய்க்கு விற்றது.

**வனவிலங்குகள் கணக்கெடுப்பு: ஊழியர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,00:50 IST

பொள்ளாச்சி : ஆனைமலை புலிகள் காப்பகத்தில் ஆறு வனச்சரகங்களில் வசிக்கும் வன விலங்குகளின் கணக்கெடுப்பு பணி இன்று துவங்கி மூன்று நாட்கள் நடக்கிறது.முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனப்பாதுகாவலர் உத்தரவின் பேரில் துவங்கப்படும் கணக்கெடுப்பு பணியில் அந்தந்த பகுதி வனச்சரக அலுவலர்கள் தலைமையில் பாரஸ்டர்கள், வனக்காப்பாளர்கள், தன்னார்வ தொண்டர்கள் கணக்கெடுப்பு பணியில் கலந்து கொள்கின்றனர். வனவிலங்குகள் கணக்கெடுப்பு பணியில் எவ்வாறு ஈடுபடுவது என்பது குறித்து

பொள்ளாச்சி வன அலுவலகத்தில் நேற்று காலை ஆனைமலை புலிகள் காப்பக கள இயக்குனர் பசவராஜூ தலைமையில் வன ஊழியர்களுக்கும், தன்னார்வ தொண்டர்களுக்கும் வன விலங்குகளை கணக்கெடுப்பது பற்றி பயிற்சியளிக்கப்பட்டது. மாவட்ட வன அலுவலர்கள் தியாகராஜ், ராஜ்குமார் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், ஓசை அமைப்பினர் பயிற்சியளித்தனர். வன ஊழியர்களும், தன்னார்வ அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் 320 பேர் கணக்கெடுப்பில் கலந்துகொள்கின்றனர். இந்த ஆண்டு வரையாடு மற்றும் சிங்கவால் குரங்குகள் கணக்கெடுப்பிற்கு சிறப்பு கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

**கொப்பரை வர்த்தகம் பாதிப்பு தேர்தல் நெருக்கடி காரணமாம்!**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,00:51 IST

பொள்ளாச்சி : "தேர்தல் விதிமுறையால் ஏற்பட்டுள்ள நெருக்கடியால், கொப்பரை வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது' என, கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. காங்கேயம் மார்க்கெட்டில், கடந்த 12ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 58 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை இருந்தது. தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,310, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 87 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 16 ஆயிரம் முதல் 16 ஆயிரத்து 500 வரை, சென்னை உட்பட பிற பகுதிகளுக்கு, உணவுத் தேவைக்காக அனுப்பப்படும் இளந்தேங்காய், டன்னுக்கு (மட்டை தவிர) 15 ஆயிரத்து 500, விவசாயிகள், தோட்டத்தில் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய், 9.50 ரூபாய் வழங்கப்பட்டது.

நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 63 - 64 வரை, தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,375, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 95 - 98 வரை நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 19 ஆயிரம், சென்னை உட்பட பிற பகுதிகளுக்கு, உணவுத் தேவைக்காக அனுப்பப்படும் இளந்தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 17 ஆயிரத்து 500க்கு வழங்கப் பட்டது. கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "கடந்த வாரம் முதல், கொப்பரை வர்த்தகத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தேர்தல் விதிமுறையால் ஏற்பட்டுள்ள நெருக்கடியால், கொப்பரை வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட்டுக்கு தேவையான அளவுக்கு, கொப்பரை வரத்து இல்லாததால் விலை உயர்ந்துள்ளது. கொப்பரை கிலோவுக்கு நான்கு ரூபாயும், தேங்காய் டன்னுக்கு 2,500 ரூபாயும் விலை உயர்ந்துள்ளது' என்றனர்.

**வனவிலங்குகள் கணக்கெடுப்பு பணி**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,23:13 IST

உடுமலை : ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட உடுமலை, அமராவதி வனசரகங்களில் வனவிலங்குகள் கணக்கெடுப்பு பணி துவங்கியது.உடுமலை வனசரகத்திலுள்ள பருத்தியூர், கரட்டூர், திருமூர்த்திமலை, வல்லக்குண்டாபுரம், குருமலை, ஈசல்திட்டு (கிழக்கு, மேற்கு), கோம்பு ஆகிய சுற்றுகளில் வனக்காப்பாளர், பாதுகாவலர், வேட்டை தடுப்பு காவலர் மற்றும் மாணவர்கள்அடங்கிய எட்டு குழுவினர் கணக்கெடுப்பு பணிகளை துவக்கியுள்ளனர். முதற்கட்டமாக 2 கி.மீ., சுற்றளவில், புலிகளுக்கு உணவாகிய விலங்குகளின் கழிவு கண்டறியப்படுகிறது.தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு கால்தடம்,எச்சம் மற்றும் நேரில் பார்த்தல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள் ளன. வரும் 22 முதல் வனப்பகுதியிலுள்ள நீராதாரங்களுக்கு வரும் விலங்குகள் கணக்கெடுக்கப்படுகிறது.அமராவதி வனசரகத்திலுள்ள ஆறு சுற்றுகளிலும் கணக்கெடுப்பு பணிகள் துவங்கியுள்ளது.

**ஆறாவது அழிவை நோக்கி செல்லும் பூமி : சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தகவல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,00:59 IST

கோத்தகிரி : கோத்தகிரி அரசு மேல்நிலைப்பள்ளியில் தேசிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாமை முன்னிட்டு, பேரணி, கருத்தரங்கு மற்றும் மரம் நடுவிழா நடந்தது.மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை சார்பில், ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. இதன்படி, ஊட்டி "நெஸ்ட்' அறக்கட்டளை சார்பில்,கோத்தகிரி மிளிதேன் அரசு மேல்நிலை பள்ளியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.
தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர் ஆசிரியர் ராஜூ சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசியதாவது: பூமியானது தனது 460 கோடி ஆண்டு வாழ்நாளில் இதுவரை ஐந்து முறை பேரழிவை சந்தித்துள்ளது. தற்போது ஆறாவது அழிவை நோக்கி செல்கிறது. இற்கு முழு காரணம், இயற்கை அல்ல;மனிதர்கள் தான். தற்போது பூமியில் 30 லட்சத்தில் இருந்து 10 கோடி வரையில் உயிரினங்கள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர். ஆனால், அவற்றில் சுமார் 14 லட்சத்து 35 ஆயிரத்து 662 உயிரினங்களே அடையாளம் காணப்பட்டுள்ளன. வளர்ச்சியின் பெயரால், மனிதர்கள் மேற்கொண்ட செயல்பாடுகளால் ஒவ்வொரு ஆண்டும் 27 ஆயிரம் உயிரினங்கள் அழிந்து வருகின்றன. பறவையினங்களில் 8ல் ஒன்றும், பாலூட்டிகளில் 4ல் ஒன்றும், மெல்லுடலிகளில் 3ல் ஒன்றும் என, பல உயிரினங்கள் வேகமாக அழிந்து

வருகின்றன.விவசாய பயிர்களில் 75 சதவீதம், மீன் இனத்தில் 90 சதவீதம் முற்றிலும் அழிந்துவிட்டன.

தமிழ்நாட்டில் மட்டும் 2 ஆயிரத்து 500 வகையான அரிசிகள் இருந்தன. தற்போது 25 வகை மட்டுமே எஞ்சியுள்ளன. புதிய உயிரினங்கள் தோன்றும் வாய்ப்புகளும் குறைந்து வருகிறது. ஒற்றையின முறை, காடுகள் அழித்தல், புவிவெப்பம் போன்ற பல காரணங்களால் பூவுலகில் பல்லுயிர் சூழல் அழிந்து வருகிறது. பிற உயிரினங்கள் இருந்தால்தான் மனித குலமும் வாழமுடியும்.இவ்வாறு ராஜு பேசினார்.

சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் மையத்தின் கள இயக்குனர் குமாரவேல் பேசுகையில், ""காடுகள் மட்டும் 60 வகைகள் உள்ளன. நீலகிரியில் சோலை வனங்களை அழிவிலிருந்து காப்பதுடன், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வேண்டும்,'' என்றார்.
சுற்றுச்சூழல் ஆர்வலர் விஜயேந்திரன் பேசுகையில்,""நீலகிரி சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள சவாலை சமாளிக்க, அனைத்து மக்களுக்கு, மாணவரும் ஒன்று பட்டு செயல்பட வேண்டும்,''என்றார். தொடர்ந்து, நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு பேரணியை ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் பால்ராஜ் துவக்கி வைத்தார். மாணவ மாணவியருக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த குறும்படம் காண்பிக்கப்பட்டது. துவக்கப்பள்ளி முதன்மை ஆசிரியர் நஞ்சுண்டன் வரவேற்றார். தலைமை ஆசிரியர் நஞ்சன் தலைமை வகித்தார். ஆசிரியர்கள் ராஜேந்திரன், ஆர்தர் விஸ்வராஜ், சைனிமேத்யூஸ், நிர்மலா சரஸ்வதி, மெர்சி உட்பட பலர் கலந்துகொண்டனர். நெஸ்ட் அறக்கட்டளை நிறுவனர் சிவதாஸ் நன்றி கூறினார்.

**பெரியாறு அணையில் மத்திய மண் வள ஆய்வுக்குழு இயக்குனர் விசாரணை**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,23:14 IST

கூடலூர் : பெரியாறு அணையில் ஆய்வு செய்ய கொண்டு வந்த "ஆர்.ஓ.வி.,' இயந்திரம் பழுதாகி ஆய்வுப்பணி தடைபட்டது குறித்து விசாரணை நடத்த, மத்திய மண் வள ஆய்வுக்குழு இயக்குனர் முருகை ரத்தினம் மார்ச் 23ல் பெரியாறு அணைக்கு வருகிறார். மத்திய மண் வள ஆராய்ச்சிக் குழுவினர் மார்ச் 12ல் அணைப்பகுதிக்கு வந்தனர். ஆர்.ஓ.வி., (ரிமோட் ஆப்ரேட்டிவ் வெகிக்கிள்) இயந்திரத்தை தண்ணீருக்குள் கொண்டு சென்று அணைப்பகுதியை நவீன டிஜிட்டல் கேமரா மூலம் போட்டோ எடுக்கும் பணியைத் துவக்கினர். ஜெனரேட்டரில் பழுது ஏற்பட்டதால், இரண்டு நாட்கள் ஆய்வுப்பணியை மேற்கொள்ளவில்லை.ஜெனரேட்டர் சீரமைக்கப்பட்டு நான்கு இடங்களில் போட்டோக்கள் எடுக்கப்பட்டன.அதன்பின், ஆர்.ஓ.வி., இயந்திரத்தில் பழுது

ஏற்பட்டதால் ஆய்வுப்பணியை தொடர முடியவில்லை. பத்து நாட்களாக ஆய்வுப்பணிகள் தடைபட்டன.ஆய்வுப்பணி தடைபட்டது குறித்து விசாரிக்க, மத்திய மண் வள ஆராய்ச்சிக்குழு இயக்குனர் முருகை ரத்தினம் மார்ச் 23ல் பெரியாறு அணைக்கு வருகிறார். "ஆர்.ஓ.வி.,' இயந்திரம் பிரான்ஸ் நாட்டில் இருந்து வாங்கப்பட்டது. பழுது குறித்து பிரான்ஸ் கம்பெனிக்கு "இ-மெயில்' அனுப்பப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

**பூங்காவில் மலர் கண்காட்சி நாளை ஆலோசனைக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,22:54 IST

ஊட்டி : கோடை சீசனின் முக்கிய நிகழ்வான மலர் கண்காட்சி, வழக்கம் போல், மே இரண்டாவது வாரம் நடக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம், நாளை நடக்கிறது.சர்வதேச சுற்றுலா நகரமான ஊட்டிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. பார்வையாளர்களை கவர, மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில், ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி, குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சி, ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சி, சுற்றுலாத் துறை சார்பில், கோடை விழா நடத்தப்பட்டு வருகிறது.கோடை சீசன் நெருங்குவதால், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா மையங்களை பொலிவுப்படுத்தும் பணிகள், துரிதமாக நடந்து வருகின்றன. முக்கிய நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்த முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நாளை நடக்கிறது.ரோஜா கண்காட்சியுடன் கோடை விழா துவக்கி, மே 2வது வாரத்தில் மலர் கண்காட்சி நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**காபி தோட்டப் பணிகள் இயந்திரமயமாக்க உதவி**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,23:12 IST

தாண்டிக்குடி : காபி தோட்டப் பணிகளை இயந்திர மயமாக்கலுக்கான உதவித் திட்டத்தை செயல்படுத்த காபி வாரியத்திற்கு மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தில் உதவி தோட்டங்களின் பரப்பளவை பொறுத்தும், சுயஉதவிக்குழுக்கள், சிறு காபி விவசாயிகள் குழுக்களுக்கும் வேறுபடும். 20ஹெக்டேர் வரை உள்ள விவசாயிகளுக்கு 50 சதவிகித மான்யம் என்ற உச்சவரம்பில் ரூ.2 லட்சமும், 20 ஹெக்டேருக்கு மேல் உள்ளவர்களுக்கு 25 சதவிகிதத்தில் மான்யமாக ரூ.4.5 லட்சம் கிடைக்கும். சுயஉதவிக்குழுக்களுக்கும்,சிறு காபி விவசாயக் குழுக்களுக்கு 50 சதவிகிதத்தில் ரூ.5 லட்சம் வரை மான்யம் கிடைக்கும்.

குழி, களை எடுக்கும் இயந்திரங்கள், பேட்டரி மூலம் இயங்கும் பழம் எடுக்கும் இயந்திரம், நிழல் கலைப்பு கருவி, பேட்டரி மற்றும் மோட்டார் மூலம் இயங்கும் உயர் தொழில்நுட்ப விசை தெளிப்பான் ஆகிய கருவிகள் மற்றும் இயந்திரங்கள் இத்திட்டத்தின் கீழ் பொருந்தும்.
இத்திட்டத்தின் கீழ் மான்யம் மற்றும் தகுதிகள் மற்றும் விதிமுறைகள் பற்றி அருகிலுள்ள காபி விரிவாக்க பிரிவின் இளநிலை தொடர்பு அலுவலர், தொடர்பு அலுவலர், துணை இயக்குனர் (விரிவாக்கம்) அல்லது இணை இயக்குனர் விரிவாக்கம் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.
மேலும் காபி வாரிய இணைய தளம் மூலம் இத்திட்டம் பற்றி விவரங்களை அறியலாம் என காபி வாரிய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோடை காலத்தில் கால்நடைகளுக்கான தீவன பற்றாக்குறையை போக்க திட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2011,23:12 IST

திண்டுக்கல் : கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தீவனப்பற்றாக்குறையை சமாளிக்க குழி புல் தயாரிக்க கால்நடைத்துறை கிராம மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. தமிழகத்தில் கோடைகாலத்தில் கால்நடைகளை தொற்றுநோய் அதிகம் தாக்காது. கால்நடைகளுக்கு பெரும்பாலும் வயிற்று போக்கு ஏற்படும்.

ஆடுகளுக்கு அம்மை நோய் தாக்கக் கூடும். இதற்கான தடுப்பூசிகளை உடனடியாக கால்நடை மருந்தகங்களில் போட்டுக் கொள்ளலாம். வெயில் நேரத்தில் கால்நடைகளுக்கு அதிகளவு தண்ணீர் தேவைப்படும். தீவனப்பற்றாக்குறையும் ஏற்படும். இதனால் தண்ணீர் பற்றாக்குறையை போக்குவதற்கு அனைத்து கால்நடை ஆஸ்பத்திரி, மருந்தகங்களில் தண்ணீர் தொட்டிகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பவர்கள் மதிய நேரம், கடுமையான வெயில் இருக்கும் என்பதால், அப்போது கால்நடைகளை வெளியில் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதிகாலையே கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட வேண்டும். மதியம் 4 மணிக்கு மேல் மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும். குழிப்புல்: வெயில் நேரத்தில் கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறை ஏற்படும். இதனால் பால் உற்பத்தியும் குறைவதற்கு வாய்ப்புள்ளது. கரும்பு தோகைகளை 4 அடி ஆழத்திற்கும், 8 அடி அகலத்திற்கு பெரிய குழி தோண்டி போட வேண்டும். இதில் உப்பு மற்றும் கரும்பு பாகுகளை போட வேண்டும். இவற்றை காற்று புகாமல் மூடி வைத்தால் நொதித்தல் ஏற்பட்டு கால்நடைகளுக்கு சத்துள்ள ஆகாரமாக இருக்கும். இவற்றை

கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த கால்நடைத்துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

## *மார்ச் 1–ந் தேதி நிலவரம் அரிசி, கோதுமை கையிருப்பு 4.58 கோடி டன்னாக உயர்வு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*மார்ச் 1–ந் தேதி நிலவரப்படி நம் நாட்டில் அரிசி, கோதுமை ஆகிய உணவு தானியங்கள் கையிருப்பு 4.58 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இந்திய உணவுக் கழகம் உள்ளிட்ட அரசு அமைப்புகள் அதிக அளவில் கொள்முதல் செய்துள்ளதே இதற்கு காரணமாகும்.*

*மத்திய அரசின் இருப்பில் உள்ள உணவு தானியங்களில், அரிசி 2.87 கோடி டன் உள்ளது. கோதுமை 1.71 கோடி டன் உள்ளது. எனவே பொது விநியோக முறைக்கும், மற்ற சமூக நலத் திட்டங்களுக்கும் தேவையான தானியம் தாராளமாக உள்ளது என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த இரண்டு பிரிவுகளுக்கும் ஓர் ஆண்டில் தேவைப்படும் அரிசி, கோதுமையின் அளவு 4.88 கோடி டன் ஆகும்.*

## கொலக்கம்பை பகுதியில் பெய்த மழையால் பீன்ஸ் பயிர் செடிகள் பாதிப்பு; மீண்டும் விதைகள் நடவு விவசாயிகள் கவலை

கொலக்கம்பை,மார்ச்.21–

கொலக்கம்பை பகுதியில் பெய்த மழை காரணமாக பீன்ஸ் பயிர் செடிகள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் விரக்தி அடைந்து மீண்டும் விதைகள் நடவு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடும் வெயில், காற்று

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான தூதூர்மட்டம், டெராமியா, கெரடாலீஸ், சட்டன், கிளிஞ்சடா, கரும்பாலம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு இரவு நேரங்களில் பலத்த மழையும், பகல் நேரங்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப் பட்டது.

இதனையடுத்து கடந்த 2 வாரங்களாக சமவெளி பகுதிகளுக்கு ஈடாக பகல் நேரங்களில் கடுமையான வெயிலும், இரவு நேரங்களில் குளிர்ந்த காற்றும் நிலவி வருகிறது.

மேரக்காய்

இந்த நிலையில் கொலக் கம்பை பகுதிகளில் உள்ள ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாய நிலங்களில் மேராக்காய் விவ சாயத்தை அடுத்து பீன்ஸ் பயிரை அதிக ளவில் விவசாயிகள் பயிரிட்டு வந்தனர்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு பெய்த கடுமையான மழையால் பீன்ஸ் செடிகள் நன்றாக வளர்ந்தது. ஆனால் தற்போது கொலக்கம்பை பகுதியில் நிலவும் கால நிலையில் பீன்ஸ் செடி கள் 50 சதவீதம் பழுத்து போய் விட்டன.

மகசூல்

இந்த பீன்ஸ் செடிகள் நன்றாக வளர்ந்திருந் தால், வரும் சித்திரை மாதத்தில் நல்ல மகசூல் கிடைத்திருப்பதோடு நல்ல விலை கிடைத் திருக்கும் என விவ சாயிகள் தெரிவிக்கின்ற னர். தற்போது பீன்ஸ் செடிகள் பழுத்து போனதால், விவசாயி கள் பெரும் கவலை அடைந்து உள்ளனர்.

இதனால் கொலக் கம்பை பகுதியல் உள்ள விவசாயிகள் மீண்டும் தங்கள் விவசாய நிலங்களில் உழுது, பழுத்து போன பீன்ஸ் செடிகளை அகற்றி விட்டு, மீண்டும் பீன்ஸ் விதைகளை நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு உள்ள னர்.

விலை வீழ்ச்சி

இது குறித்து கொலக்கம்பை விவசாயி நந்தி கவுடர் கூறுகையில், நீலகிரி மாவட்டத்தின் பணப்பயிராக விளங்கி வந்த, தேயிலை பயிருக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதை

தொடர்ந்து சில விவசாயிகள் மாற்று விவசாயம் செய்ய முடிவு செய்தனர்.

தங்கள் தேயிலை தோட்டங் களின் இடையே மலை தோட்ட காய்கறி விவசாயம் செய்ய இடங்களை தயார் செய்து பீன்ஸ், முட்டைகோஸ், உருளைக்கிழங்கு, வெங்காயம், கேரட் போன்ற மலை தோட்ட காய்கறி பயிர்களை விவசாயம் செய்து அதன் மூலம் வருமானம் ஈட்டி வருகின்றோம்.

சித்திரை மாதம்

தற்பொழுது நிலவும் தட்ப வெப்ப நிலைக்கு, இப்பகுதியில் பீன்ஸ் பயிர் செய்தால் நல்ல மகசூல் கிடைப்பதுடன் நல்ல விலையும் கிடைக்கும். வருகிற சித்திரை மாதத்தில் பீன்ஸ் பயிர் அறுவடை செய்து மேட்டுப் பாளையம் மொத்த காய்கறி மண்டிக்கு எடுத்து சென்றால் போதுமான விலை கிடைக்கும்.

அதனை நம்பி வருடந் தோறும் பிப்ரவரி மாதம் எங்கள் நிலங்களை தயார் செய்து பீன்ஸ் பயிரிட்டு வருகிறோம். இதன்படி இந்த வருடமும் பயிர் செய்தோம். ஆனால் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு பெய்த மழையினால் ஓரளவு வளர்ந்த பீன்ஸ் செடிகள் மழையால் பாதிக்கப் பட்டு செடிகள் பழுத்து போய் விட்டன.

எனவே பழுத்து போன இந்த செடிகளை அகற்றி விட்டு, மீண்டும் விதை நடவு செய்துள்ளோம். இது அறுவடைக்கு தயாராகும் காலத்தில் போதுமான விலை கிடைக்குமா ? என்ற அச்சம் விவசாயிகள் இடையே ஏற்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

## வரத்து குறைந்ததால் எகிறியது எலுமிச்சை கிலோ ரூ.80 ஆக உயர்வு

பதிவு செய்த நாள் 3/21/2011 2:09:57 AM



பொள்ளாச்சி : பொள்ளாச்சியில் உள்ள காய்கறி மார்க்கெட்டுகளுக்கு எலுமிச்சை வரத்து குறைந்துள்ளதால் விலை இரு மடங்கு அதிகரித்துள்ளது. பொள்ளாச்சியில் உள்ள காந்தி மார்க்கெட், திரு.வி.க. மார்க்கெட், தேர்நிலை மார்க்கெட் ஆகிய காய்கறி மார்க்கெட்டுகளுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து அதிகளவில் காய்கறிகள் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகிறது.

இதில் கடந்த சில நாட்களாக எலுமிச்சம் பழம் வரத்து வெகுவாகக் குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. இது குறித்து காந்தி மார்க்கெட்டில் எலுமிச்சம்பழம் விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர் கூறியதாவது, பொள்ளாச்சியில் உள்ள சந்தைகளுக்கு கோவில்பட்டியில் இருந்துதான் அதிகளவில் எலுமிச்சம் பழம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றி கேரள மாநிலத்தில் இருந்தும் அதிகளவில் வியாபாரிகள் இங்கு வந்து எலுமிச்சம்பழத்தை வாங்கிச் செல்கின்றனர். பொள்ளாச்சியில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு கடந்த வாரம் வரை அதிகளவில் எலுமிச்சம்பழம் வந்து கொண்டிருந்தது. ஆனால் உற்பத்தி குறைந்துவிட்ட நிலையில் தற்போது வரத்தும் குறைந்துள்ளது. இதன் காரணமாக பழத்தின் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

கடந்த வாரத்தில் ஒரு கிலோ எலுமிச்சம்பழம் அதிகபட்சம் ரூ.40 வரைதான் விற்கப்பட்டது. ஆனால் வரத்து குறைந்துவிட்டாலும் தேவை அதிகமாக இருப்பதால் தற்போது ஒரு கிலோ எலுமிச்சம்பழம் ரூ.80க்கு விற்கப்படுகிறது. சில்லரை விற்பனையில் ஒரு எலுமிச்சம்பழம் ரூ2க்கு விற்றுக்கொண்டிருந்த நிலை மாறி தற்போது ஒரு எலுமிச்சம்பழம் ரூ.4 முதல் ரூ.5 வரை விற்கப்படுகிறது.

**வெங்காயம் கொள்முதல் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் 3/21/2011 2:09:38 AM




தாராபுரம் : தாராபுரம் பகுதியில் பி.ஏ.பி மற்றும் அமராவதி புதிய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது. வெங்கத்தின் கொள்முதல் விலை ஆரம்ப நிலையிலேயே மிகவும் குறைவாக உள்ளது. இன்னும் அறுவடை கூடுதலாகும் போது, கொள்முதல் விலை மேலும் சரியும் நிலை ஏற்படும் என்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தாராபுரம் தாலுக்காவில் கோவிந்தாபுரம், சின்னபுத்தூர், நாரணாபுரம், முண்டுவேலாம்பட்டி, தாசர்பட்டி, குண்டடம், உப்பாறு அணை, மேட்டுக்கடை, பூளவாடிஉள்ளிட்ட பகுதிகளில் வழக்கமாக சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படும். இந்த ஆண்டு சின்ன வெங்காயத்திற்கு கிராக்கி அதிகமானதால் விலை எதிர்பாரத வகையில் ஏறியது. கிலோ ரூ.100 வரை விற்கப்பட்டது. நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் விதைக்காக வைத்திருந்த வெங்காயத்தையும் சேர்த்து விற்பனை செய்தனர். இதனால் இந்த முறை சாகுபடிக்கு கூட விதை இல்லாமல் போனது. இதனால் வெங்காய விதைகள் கிலோ ரூ.4 ஆயிரம் வரையில் விற்கப்பட்டது.

இந்நிலையில் வெங்காயத்தின் விலை கூடும் என்பதால் முன்பு சாகுபடி செய்ததை விட தற்போது கூடுதலாக 5 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்யபட்டுள்ளது. தற்போது விளைச்சல் அதிகரிக்கும் நிலையில் அதன் கொள்முதல் விலை சரியத் துவங்கி விட்டது. கிலோ ரூ.15 லிருந்து ரூ.20 வரை மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இது போகப் போக இன்னும் குறைய வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

## மாம்பழ ஏற்றுமதி லாபமில்லை

பதிவு செய்த நாள் 3/20/2011 3:11:10 AM



புதுடெல்லி: அமெரிக்காவுக்கு இந்தியா சுமார் ரூ 9 கோடி மாம்பழ ஏற்றுமதி செய்துள்ளது. ஆனால், பாதுகாப்பு காரணங்கள், சுகாதார சோதனைகள் என மாம்பழங்களை கதிரி யக்க சோதனைக்கு அமெரிக்க அதிகாரிகள் உட்படுத்தினர். அதற்கு ரூ 1.2 கோடி வரை செலவிட வேண்டியிருந்தது. இதனால் மாம்பழ ஏற்றுமதியில் லாபமில்லை.

## துவரம் பருப்பு விலை மூட்டைக்கு ரூ 100 சரிவு

பதிவு செய்த நாள் 3/20/2011 3:07:56 AM



விருதுநகர்: சர்வதேச சந்தையில் குரூட் பாமாயில் விலை சரிந்ததைத் தொடர்ந்து பாமாயில் விலையில் டின்னுக்கு ரூ 30 குறைந்துள்ளது. பாமாயில் விலை குறைந்ததால் கடலை எண்ணை விலையும் டின்னுக்கு ரூ 10 குறைந்துள்ளது. மார்க்கெட்டிற்கு வரத்து அதிகமாக உள்ளதால் துவரம் பருப்பு மூட்டைக்கு ரூ 100 விலை குறைந்துள்ளது. தேனி துவரை வரத்து அதிகரித்துள்ளதால் துவரம் பருப்பு (100 கிலோ) மூட்டைக்கு ரூ 100 விலை குறைந்துள்ளது. மார்க்கெட்டில் கடந்த வார விலை நிலவரம்: லயன் துவரை ரூ 4,000, நாடு துவரை ரூ 2,800, தேனி துவரை ரூ 3,000, துவரம் பருப்பு லயன் ரூ 6,000, உடைப்பு துவரம் பருப்பு ரூ 5,400, தேனி துவரம் பருப்பு ரூ 5,200, நாடு துவரம் பருப்பு ரூ 4,600.